**செய்தி வெளியீடு எண்:215** **நாள்: 10.03.2011.**

வரும் 13.04.2011 அன்று நடைபெற உள்ள சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் தகுதியுள்ள அனைவரும் வாக்களிக்க ஏதுவாக 100 சதவீதம் பிழையற்ற புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்க முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி 2010 ஆம் ஆண்டிலும் 2011ல் நடைபெற்ற வாக்காளர் சேர்ப்பின்போதும் வாக்காளராக பதிவு செய்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்க 12.02.2011, 19.02.2011 மற்றும் 20.02.2011 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

தற்போது நிலுவையாக உள்ள அடையாள அட்டைகளை வழங்குவதற்கு 12.03.2011 மற்றும் 13.03.2011 ஆகிய (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) நாட்களில் மீண்டும் சிறப்பு முகாம் நடத்தப்படவுள்ளது. இம்முகாம்கள் ஊரகப் பகுதிகளில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களிலும் நகர்ப்புறப் பகுதிகளில் நகராட்சி அலுவலகங்களிலும் மற்றும் மாநகராட்சி அலுவலகங்களிலும் சென்னையைப் பொறுத்தவரையில் மண்டல அலுவலகங்களிலும் நடைபெறும். அத்துடன் வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் மையங்களிலும் வழக்கமாக இவ்வட்டை வழங்கப்படும்.

எனவே, 2010 மற்றும் 2011 வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தத்தின்போது பதிவு செய்துகொண்டு இதுவரை அடையாள அட்டை பெறாத வாக்காளர்கள் அனைவரும் வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக அடையாள அட்டை பெற இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**